## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.87/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேந்தர் | மதம் | : இந்து |
| த/பெ | : சஞ்சீவி | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : கடவாரி கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : அரக்கோணம் |

**20.01.2025**

<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் விவசாயம் தவிர வேறு என்ன தொழில் செய்கிறேன் என்றால் வேறு தொழில் செய்யவில்லை. பூசணிக்காய் மட்டும் எடுத்து சென்று விற்பேன். 2007 ல் நான் சொத்தை கிரையம் வாங்கும்போது அது பாதையில் உள்ள சொத்து என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எப்போது அது பாதை என்று தெரியும் என்றால் இன்றுவரை அது பாதை இல்லை. பிரதிவாதிகள் திருமலை, ஜெகந்நாதனை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 20 வருடங்களாக தெரியும். பிரதிவாதிகளை எப்படி எனக்கு தெரியும் என்றால் நான் முன்பு அரிசி வியாபாரம் செய்தேன். அப்போது அவர்கள் சரஸ்வதி பஞ்சு மில்லில் வேலை செய்து வந்தார்கள்.

2. நான் எப்படி அரிசி வியாபாரம் செய்வேன் என்றால் எனது வயலில் விளையும் நெல்லை அரிசி ஆக்கி விற்பனை செய்வேன். பிரதிவாதிகளின் வீட்டிற்கு மட்டும் அரிசி போடுவேனா என்றால் அந்த பகுதி முழுமைக்கும் போடுவேன். எப்படி கொண்டு வந்து போடுவேன் என்றால் டிராக்டரில் கொண்டு வந்து போடுவேன். பிரதிவாதிகளை சொத்தை வாங்கும் முன்பிருந்தே எனக்கு வியாபார அடிப்படையில் தெரியும் என்றால் சரிதான். நான் சொத்தை கிரையம் வாங்கும்போது பிரதிவாதிகளிடம் எதுவும் விசாரித்தேனா என்றால் இல்லை.

3. கடவாரி கண்டிகையில் இருந்து சரஸ்வதி நகருக்கு நான் வந்து சொத்து வாங்கும் முன்பு அங்கு யாரிடமும் விசாரித்தேனா என்றால் வேறு யாரிடமும்

விசாரிக்கவில்லை. இடத்துக்காரரிடம் மட்டும விசாரித்தேன். பாதை என்பது எனக்கு அப்போது தெரியாது. 2007 ல்தான் நான் சொத்து வாங்கினேன் என்றால் சரிதான். அப்போது நான் அரிசி வியாபாரம் செய்தேனா என்றால் இல்லை. நிறுத்திவிட்டேன். சொத்தை கிரையம் வாங்கும் முன்பு நான் சொத்தை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. ஆவணத்தை மட்டும்தான் பார்த்தேன்.

4. சொத்தை பார்க்காமல் சொத்து பாதையில் வருவதாக எப்படி சொல்கிறேன் என்றால் சொத்து பாதையில் வரவில்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொத்து பாதையில் வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சொத்து பாதையில் வருவதாக நான் சொல்லவில்லை. பிரதிவாதிகள் வீட்டிற்கு போகும் பாதை எங்குள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த இடத்திற்கே போகவில்லை. 2007 ல் எந்த ஆவணத்தின்படி இந்த சொத்தை கிரையம் பெற்றேன் என ஆவண எண் சொல்ல முடியுமா என்றால் ஆவண எண் தெரியவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் ஆவண எண் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பத்திரத்தில் உள்ளது. சொத்திற்கு பட்டா எந்த ஆவணத்தின்படி வாங்கினேன் என்றால் பத்திரத்தின் நகலை கிராம நிர்வாக அதிகாரியிடம் கொடுத்து பட்டா பெற்றேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)